**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 906 /2022**

**Prosecution Witness : 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **முரளிதரன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | | **Calling** | : | **உதவி மருத்துவ அதிகாரி தலைமை மருத்துவமனை திண்டுக்கல்** |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |
| | | | **Dated** | : | |

**24.09.2024**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–7 திரு. **முரளிதரன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 6 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>1 முதல் 6 எதிரிகள் ஆஜரில்லை.</u>** <u>355 BNSS Petition filed and allowed.</u>

நான் தற்போது திண்டுக்கல் மருத்துவமனை மருத்துவக்கல்லூரியில் உதவி மருத்துவராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 06.04.2023 ம் தேதி இரவு 9.20 மணி அளவில் பணியில் இருந்தபோது வனராஜ் மகன் பூமிராஜா சிறுமலை(30) 4 தெரிந்த நபர்களால் சுமார் 7.30 மணியளவில் 06.04.2021 அன்று அவரது வீட்டில் கட்டையால் தாக்கப்பட்டதாக கூறினார்.அவரை நான் பரிசோதித்தபோது தலையின் வலது பக்கம் சுமார் 4*1 அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.அவரது வலது கையில் வீக்கம் இருந்தது. அவரின் தலைப் பகுதியை ஸ்கேன் செய்து பார்த்ததில் நார்மலாக இருந்தது. வலது கையை எக்ஸ்ரே எடுத்துப்பார்த்ததில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. அதற்கான முதலுதவிகள் செய்தேன். அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து வலது கையில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் எனவும், தலையில் ஏற்பட்ட காயம் சாதாரண காயம் எனவும் சான்று வழங்கினேன். (**பூமிராஜா என்பவரது காயச்சான்று அ.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

அதே தேதி இரவு 09.25 மணியளவில் பூமிராஜா மகள் ஹாசினி 2 வயது மதிக்கத்தக்க பெண் குழந்தையை அவரது தாயார் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரைப் பரிசோதித்து பார்த்தபோது தலையில் 4*1*5 அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது. அவரை ஸ்கேன் செய்து பார்த்ததில் நார்மலாக இருந்தது.அவருக்கு

ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன்.(**ஹாசினி என்பவரது காயச்சான்று அ.த.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

அதே தேதியில் இரவு 11.00 மணியளில் ஆண்டிச்சாமி மகன் வசந்தராஜா 11 வயது மதிக்கத்தக்க சிறுவன் சிகிச்சைக்காக வந்திருந்தார். அவரை அவரின் தாத்தா வனராஜ் என்பவர் அழைத்து வந்திருந்தார். அவரை பரிசோதித்த பார்த்ததில் வலது கையில் வீக்கம் இருந்தது. வலி இருப்பதாக சொன்னார்.எக்ஸ்ரே எடுத்து பார்த்ததில் வலது கையில் எலும்பு முறிவு இருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். (**வசந்தராஜா என்பவரது காயச்சான்று அ.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சிறுவன் வசந்தராஜா தன்னை 2 தெரிந்த நபர்கள் தாக்கியதாக மருத்துவ பரிசோதனையின் போது சொன்னார் என்றால் சரிதான். 2 வயது குழந்தையிடம் அவருக்கு காயம் எவ்வாறு ஏற்பட்டது போன்ற தகவல்களை நான் பெறவில்லை என்றால் அவர் பதிலளிக்கவில்லை.ஹாசினி என்பவரின் காயச் சான்றில் அவரை தெரிந்த 4 நபர்கள் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது அதை யாரிடம் கேட்டு எழுதினேன் என்றால் குழந்தையின் தாயாரிடம் கேட்டு எழுதினேன். பொதுவாக விபத்து பதிவேடு என்பது காயம்பட்ட ஒருவரை சிகிச்சைக்காக அனுமதிப்பதற்காக எழுதப்படுவது என்றால் எம்எல்சி கேசில் வழக்கமாக தயார் செய்வோம். பொதுவாக தொடர் சிகிச்சையின் முடிவில் காயச் சான்று வழங்கப்படும் என்றால் சரிதான். மேற்படி காயம் பட்டதாக சொல்லப்படும் நபர்களுக்கு நான் தொடர்சிசிக்சை வழங்கவில்லை என்றால் சரிதான் நிபுணர்கள் வழங்கினார்கள். மேற்படி நிபுணர் மருத்துவர்கள் வழங்கிய சிகிச்சை குறித்த ஆவணங்கள் எக்ஸ்ரே போன்ற_ஆவணங்களை போலிசார் கேட்டுப் பெறவில்லை என்றால் சரிதான். நான் வழங்கிய காயச்சான்றுடன் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி நபர்களுக்கு தனியாக காயச்சான்று வழங்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நபர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் தள்ளு முள்ளின் போது கீழே விழுந்ததில் கூர்மையான பகுதிகளில் மோதி ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் 2 வயது குழந்தைக்கு கீழே விழுந்ததில் அவ்வளவு பெரிய காயம் ஏற்பட வாய்ப்பில்லை.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2024.09.24 16:34:12 +0530

Judicial Magistrate No.I
Dindigul.